## இலங்கை புகையிரத திணைக்களத்தில் புகையிரத மேற்பார்வை முகாமைத்துவ /இயக்க முகாமைத்துவ தொழில்நுட்பவியல் சேவை பிரிவில் புகையிரத என்ஜின் சாரதி பதவியில் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - (2025)

இலங்கை புகையிரத திணைக்களத்தில் புகையிரத என்ஜின் சாரதி பதவியில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2025/03/28 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு மேற்பட்ட 30 வயதினை விஞ்சாத இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதி 2025/03/28 ஆகும். அதற்கமைய 2007/03/28 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு பின்னராக பிறந்த நாளினை உடையவர்களுக்கு மாத்திரமே இதற்கு விண்ணப்பிப்பதற்கான தகைமை காணப்படுகின்றது. இப் பரீட்சையை நடாத்துவதற்காக பரீட்சை நிலையங்களை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள் அட்டவணை ஒன்றில்(01) காட்டப்பட்டுள்ளன. விண்ணப்ப பத்திரத்தின் மேல் தலைப்பானது இந் நகர இலக்க அட்டவணைப்படி நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பித்த நகரத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. ஆயினும், போதியளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத நகரங்களில் விண்ணப்பதாரிகள் அருகில் உள்ள பரீட்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுவர். எவ்வாறாயினும் உத்தேசிக்கப்பட்ட அனைத்து நகரங்களிலும் அல்லது அதிக எண்ணிக்கையான பரீட்சை நிலையங்களை நிறுவுவது தொடர்பில் போதியளவு விண்ணப்பதாரிகள் எண்ணிக்கை விண்ணப்பிக்காத போது பரீட்சையினை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 1 ஆவது அட்டவணை

**பரீட்சை நிலையங்கள் அமைந்துள்ள நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகலை | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலன்நறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணராகலை | 23 |
| இரத்தினப்புரி | 24 |
| கேகாலை | 25 |

01. **விண்ணப்பம் கோரப்படும் பதவி** :

புகையிரத என்ஜின் சாரதி தரம் III

02. **பதவியின் கடப்பாடுகள்**

இலங்கை புகையிரத திணைக்களத்தில் புகையிரத இயக்க நடவடிக்கைகளின் போது புகையிரத என்ஜின் சாரதிகளின் நடவடிக்கைகள் தொடர்பில் விசேட தொழில்நுட்ப திறன்கள், அதாவது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டவாறு **தேசிய தொழிற்பயிற்சி தகுதிச் சான்று** ஆறின் (06) கீழ் கொண்டுவரப்பட்ட ஏற்புடைய தொழில் நிபுணத்துவத்தினை உள்ளடக்கிய புகையிரத என்ஜின் செயற்படுத்துவதற்கான செயலினை நிறைவேற்றுவது மற்றும் நடாத்தி செல்வது தொடர்பில் பொதுவான அடிப்படை தேவைகளை மேற்கொள்ளும் சேவை பிரிவாகும்.

03. **சம்பள அளவுத்திட்டம் :**

புகையிரத என்ஜின் சாரதி தரம் III தொடர்பில் ஏற்புடைய சம்பள அளவுத்திட்டம் ரூ. 34,130.00 - 5 x 495 - 5 x 575 - 10 x 720 -10 x 745 - ரூ. 54,130

04. (அ) **கல்விசார் தகைமைகள்**

(i) மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானம், அடங்கலாக 04 பாடங்களில் திறமை சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில்(06) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியெய்திருத்தல்

மற்றும்

(ii) கபொ.த.(உயர்தர) பரீட்சையில் இணைந்த கணிதம்,பௌதீகவியல் மற்றும் ஏதேனுமொரு இன்னுமொரு விஞ்ஞான பாடம் உள்ளடங்கலாக அனைத்து பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியெய்திருத்தல்.

(ஆ) **தொழில்சார் தகைமைகள்**

கீழ்வரும் பாடநெறிகளில் ஒன்றையேனும் அல்லது இரத்மலானை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் அல்லது அரசாங்க தொழில்நுட்பவியல் கல்லூரியொன்றில் அல்லது தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் உள்ள தொழில்நுட்ப கல்லூரியொன்றில் 02 வருட முழுநேர டீசல் என்ஜின் தொடர்பிலான பாடநெறியினை கற்று சான்றிதழ் பெற்றிருத்தல், இந்த பாடநெறி தேசிய தொழிற்பயிற்சி தகுதிச் சான்றில் ஆறாவது(06) மட்டத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.

(i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி

அல்லது

(ii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பாடநெறி

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சின் மூலம் வழங்கப்படுகின்ற உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பாடநெறி

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்பவியல் டிப்ளோமா பாடநெறி

(இ) **உடற்சார் தகைமைகள் :**

i. அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்கு ஏனைய எல்லா வகையிலும் உடற்சார் தகைமைகளை கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

ii. பதவியில் கடமை புரிவதற்கு தேவையான உடற்சார் தகைமைகளை கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

iii. உயரம் குறைந்த பட்சம் 05 அடி 04 அங்குலம் இருக்க வேண்டும் என்பதோடு வெளிசுவாசத்தின் போது மார்பு 32 அங்குலத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

iv. 6/6, 6/6 கண் பரீட்சையில் சித்தி பெற வேண்டும்.

(ஈ) **வேறு தகைமைகள்** :

i. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையை கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும்.

iii. ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்கும் தகைமை உள்ளது.

குறிப்பு.- விண்ணப்ப கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு மேற்கூறிய அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கு சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான முறைமை** :

மேற்கூறிய (04) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு திறந்த எழுத்து மூல பரீட்சை நடாத்தப்பட்டு, பெற்றுக்கொள்ளும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். விண்ணப்பங்களை கோரும் சந்தர்ப்பத்தில் நிலவும் வெற்றிடங்கள் மாத்திரம் நிரப்பப்படுவதோடு காத்திருப்பு பட்டியலில் வைக்கப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட மாட்டாது.

06. **ஆட்சேர்ப்பு செய்யும் பரீட்சையின் பரீட்சை முறைமை** :

(i) இந்தப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

(ii) பரீட்சை முறைமை

(அ) பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ்மொழி மூலம் நடாத்தப்படும்.

(ஆ) அனைத்து வினாத்தாள்களுக்கும் மேலே 04 ஆம் பந்தியில் கீழ் கோரப்படுகின்ற தகைமைகளை நிறைவு செய்த மொழி மூலத்திலேயே தோற்ற வேண்டும்.
விண்ணப்பித்த மொழி மூலத்தை மாற்றுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது.

(iii) பரீட்சைக்கான பாடங்கள்

(அ) பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை

(ஆ) தொழில்நுட்ப அறிவு

(iv) பாட விதப்புரை

(அ) பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை

காலம் 01 மணித்தியாலயம் , 100 புள்ளிகள்

விண்ணப்பதாரியின் வாத திறமை மற்றும் விபரிப்பு ஆளுமை மற்றும் சரியான நிகழ்வினை அனுமானிப்பதற்கான திறமை,பொது அறிவு மற்றும் நுண்ணறிவு பற்றிய மதிப்பீட்டினை மேற்கொள்வதினை நோக்காக கொண்டு இது அமைக்கப்பட்டுள்ளது. இது கணித பிரச்சினைகள் ,பொது அறிவு, சுற்றாடல் மற்றும் அதனை தழுவிய 50 கேள்விகளை உள்ளடக்கிய பல்வினா மற்றும் சுருக்கமாக விடையளிக்கும் மாதிரியான வினாப் பத்திரமாகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(ஆ) தொழில்நுட்ப அறிவு - காலம் 03 மணித்தியாலங்கள். 100 புள்ளிகள்

டீசல் என்ஜின் தொழில்நுட்பம் மற்றும் அதனை தழுவிய அறிவினை போலவே இயந்திரோபகரணங்கள் தொடர்பிலான அறிவினை மதிப்பிடுதலை நோக்காகக் கொண்டு இது தயாரிக்கப்பட்டுள்ளது. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(v) தெரிவு செய்யும் முறைமை :

ஒவ்வொரு பாடத்திலும் 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேலதிகமாக பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் பரீட்சையில் சித்தி பெற்றவர்களாக கருதப்படுவதோடு, இப் பரீட்சையில் இரண்டு பாடங்களிலும் அதிக புள்ளிகளை பெற்று சித்திபெற்ற விண்ணப்பதாரிகள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அவர்களது தகைமைகள் பரீட்சிக்கப்படும். இப் பரீட்சிப்பின் போது புள்ளி எதுவும் வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பம் கோரப்படும் சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிடங்களுக்கு அமைய இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் புகையிரத என்ஜின் சாரதி III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர். விண்ணப்பதாரிகள் மேற்குறித்த 06 இல் IV

இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைய பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளை பெற்றுள்ள திறமைகளின் அடிப்படையிலேயே நியமனம் செய்யப்படுவதற்கு தெரிவு செய்யப்படுவர்.

vi. பரீட்சை பெறுபேறுகள்
வர்த்தமானி அறிவித்தல் 06(V) பந்திக்கமைய அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளின் முழு புள்ளிகளின் திறமைக்கமைய தயாரிக்கப்பட்ட பட்டியலானது புகையிரத பொதுமுகாமையாளரிடம் வழங்கப்படும்.

பரீட்சைக்கு தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும்.

07. **விண்ணப்பங்களை முன்வைப்பதற்கான அறிவுரைகள் :**

(i) ❖ விண்ணப்பம் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் “Our services” கீழ் உள்ள “Online Applications-Recruitment Exams/E.B.Exams” ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு விண்ணப்பங்கள் நிகழ்நிலை முறைமூலம் (Online) மாத்திரமே முன்வைக்கப்பட முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்களை பொறுப்பேற்றல் 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு திறக்கப்படுவதுடன் 2025 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆம் திகதி இரவு 9.00 மணிக்கு முடிவடையும்.

❖ தற்போது அரச/உள்ளூராட்சி சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் பிரதியொன்று தமது தனிநபர் கோவையில் இடப்படுவதன்பொருட்டு நிறுவன தலைவரிடம் பொறுப்பளிக்கப்பட வேண்டுமென்பதுடன் நேர்முக பரீட்சைக்காக அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவன தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி மற்றும் சேவையினை உறுத்திப்படுத்தும் கடிதமொன்று முன்வைக்கப்பட வேண்டும்.

❖ நிகழ்நிலை விண்ணப்பங்கள் (online) ஆங்கில மொழியில் மாத்திரமே நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை மூலம் முன்வைக்கப்பட்ட விண்ணப்பமானது திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா/ ஏற்றுக்கொள்ளப்படவில்லையா என அமைப்பிற்குள் பிரவேசிப்பதற்கு பயன் படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தியொன்றின் மூலம் (SMS) அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பத்தினை நிரப்புவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பித்தல் தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை(Instructions) தரவிறக்கம் செய்துக் கொள்ளவும். விண்ணப்பத்தினை நிரப்புகையில் அவ் அறிவுருத்தல்களை சரியாக கடைப்பிடிக்கவும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியினை பெற்றுக் கொண்டதன் பின்னர் அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாக கருத்திற்கொள்ளப்பட மாட்டாது. பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிரகாரிக்கப்படும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(ii) பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தினை செலுத்துகையில் கொடுப்பனவானது நிகழ்நிலை அமைப்பின் மூலம் வழங்கப்படும் கீழ்வரும் கட்டண முறைமைகளின் கீழ் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும் :

I. எந்தவொரு வங்கி கடன் அட்டையின் மூலம் (Any Bank Credit card)

II. இணையத்தளத்தினூடாக செலுத்தும் வசதிகளையுடைய எந்தவொரு வங்கி பற்றட்டையின் மூலம் (Any Bank Debit card with the Facility of Internet Transaction)

III. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமை (Online Banking Method of Bank of Ceylon)

குறிப்பு –

(அ) மேற்கூறிய முறைகள் மூலம் செலுத்தும் முறை பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்கு ஏற்புடைய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் கிடைக்கப் பெற்றமை குறித்து குறுஞ் செய்தியின் மூலம் (SMS) அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சை கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டியதுடன் பரீட்சை

கட்டணம் குறைவாக அல்லது அதிகமாக செலுத்தப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறிய செலுத்துதற் முறைகள் மூலம் பரீட்சை கட்டணங்களை செலுத்துகையில் ஏற்படும் முறைப்பாடுகள் தொடர்பில் இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(இ) பரீட்சை தொடர்பில் செலுத்தப்பட்ட தொகையானது எந்தவொரு காரணத்தினை முன்னிட்டும் மீள திருப்பியளிக்கவோ அல்லது வேறு ஒரு பரீட்சை தொடர்பில் மாற்றப்படவோ மாட்டாது.

08. i. விண்ணப்பகோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் எனும் எண்ணக்கருவின் அடிப்படையில் குறித்த பரீட்சை கட்டணத்தினை செலுத்தி விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை முன்வைத்துள்ள அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைக்கு தோற்றுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நுழைவுச்சீட்டுக்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். போட்டிப் பரீட்சைக்காக பரீட்சை நுழைவுச்சீட்டினை வழங்குவது தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளவதாக கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளை நேர்முக பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானிக்கமைய தகைமைகள் உள்ளனவா என பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லை என தெரியவருமிடத்து அவரது பரீட்சைக்கு தோற்றுவதற்கான எதிர்பார்க்கை இரத்து செய்யப்படும்

ii. விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை நுழைவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்ட உடனே இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் இது குறித்து இணையத்தளத்தின் ஊடாக அறிவிக்கப்படும். அறிவித்தல் வெளியாகி 02 அல்லது 3 நாட்கள் சென்ற பிறகும் தமது நுழைவுச்சீட்டு கிடைக்கப் பெறவில்லையெனின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் .தங்களிடம் வைத்துக் கொண்ட விண்ணப்பத்தின் பிரதி, செலுத்திய பரீட்சை கட்டணத்திற்கு ஏற்புடைய பற்றுச்சீட்டின் பிரதி என்பவற்றினை கைவசம் வைத்துக்கொண்டு விண்ணப்பித்த பரீட்சை, விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை சரியாக குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் உசாவுதலினை மேற்கொள்ளச் சொல்லுவதோடு கொழும்பிற்கு வெளியே வசிக்கும் விண்ணப்பதாரியாயின் மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை நுழைவுச்சீட்டின் அனுப்பி வைப்பதன் பொருட்டு உமது தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரல் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைப்பதன் மூலம் உசாவுதலை மேற்கொள்வது மிகவும் செயற்திறன் மிக்கதாக அமையும்.

iii. பரீட்சை விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு முன்னரே தமது அனுமதி நுழைவுச்சீட்டில் கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பரீட்சைக்கு தோற்றுகின்ற முதல் நாளே பரீட்சை மண்டலாதிபதியிடம் தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய பரீட்சை நுழைவுச்சீட்டினை கையளிக்க வேண்டும் என்பதோடு அவ்வாறின்றி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

iv. விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி நுழைவுச்சீட்டினை வழங்குதல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமையை பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது

09. விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற அனைத்து பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டலாதிபதி திருப்தியடையும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும்.அது தொடர்பில் பின்வரும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்:

1. தேசிய ஆளடையாள அட்டை ;
2. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
3. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாமல் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதி செய்ய மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு உள்ளெடுக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்கு உட்பிரவேசித்த நொடியில் இருந்து முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாது இருத்தல் வேண்டும்.

10. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் கீழ்படிய வேண்டும். அச் சட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு கீழ்படிய அவருக்கு நேரிடும்.

11. i. **சேவை நிபந்தனைகள் :**
ஆட்சேர்ப்பு செய்யப்படுவது III ஆம் தரத்திற்காகும்.

ii. **பதவியில் இணைத்துக் கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகள் :**

அ. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. ஏற்கனவே விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருப்பின் இன்னகத்தும் அதற்காக பங்களிப்புத் தொகையை செலுத்தப்பட வேண்டும்.

ஆ. திறந்த முறையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அனைவரும் இரண்டு வருட (02) பயிலுநர் காலத்திற்கு (இப் பயிலுநர் காலமானது உச்ச அளவில் 03 வருடங்கலாக திருத்தப்படலாம்) கீழ்படிவர். அக்காலத்தினுள் புகையிரத என்ஜின் பதவிக்கு ஏற்புடைய தகைமைகளை மேற்கொள்வதற்கு தேவையான கோட்பாட்டு ரீதியான அறிவு, பிரயோக பயிற்சி மற்றும் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். பயிற்சி காலத்தினுள் அப் பயிலுநர்களை ஈடுபடுத்தப்படும் பிரிவுகளில் மேற்பார்வை மற்றும் நிர்வாகத்திற்கு கீழ்படிய வேண்டும். ஆட்சேர்ப்பு திட்டத்தில் 7:2 உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள முறைமை ஊடாக சேவைக்கு இணையும் பயிலுநர், பயிலுநர் பயிற்சியின் இறுதியில் நடைபெறும் பரீட்சையில் சித்தி பெறவில்லையெனின் அப் பயிலும் உத்தியோகத்தரது சேவை நிறுத்தப்படும்.

இ. பொது நிர்வாக சுற்றறிக்கை07/2007 இன் ஏற்பாடுகளுக்கமைய அரசாங்க சேவைக்கு இணைந்த மொழி மூலத்திற்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியினை 05 ஆண்டுகளுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். அத் தேர்ச்சியினை பெற்றுக் கொள்ளாத உத்தியோகத்தர்களது சம்பள ஏற்றமானது தகைமையை பெற்றுக்கொள்ளும் வரை நிறுத்தி வைக்கப்படும்.

ஈ. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் தாபன விதிக்கோவையில் மற்றும் நிதி ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள தாபன நடைமுறை விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் கீழ் படிய வேண்டி ஏற்படும். அவ்வாறே காலத்திற்கு காலம் அரசினால் வழங்கப்படும் கட்டளைகள் தொடர்பில் திணைக்கள அறிவுறுத்தல்களுக்கு கட்டுப்பட்டு நடக்க இணங்க வேண்டும்.

12. சிங்கள மற்றும் தமிழ் மொழியில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படுவதாக தோன்றுமிடத்து அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

ஜே.ஐ.டீ.ஜயசுந்தர,
புகையிரத பொது முகாமையாளர்.

2025, பெப்புருவரி 20.

02-175

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*